# நீங்களும் உங்களது சமூக பராமரிப்புப் பணியாளரும் – எதிர்பார்ப்பது என்ன?

## உங்களது வாழ்க்கையை நீங்கள் உங்கள் விருப்பப்படி வாழ சமூக பராமரிப்புப் பணியாளர்கள் உதவுகின்றார்கள்.

வேல்ஸில் இருக்கும் பணியாளர்கள் உங்களுக்கு சிறந்த பராமரிப்பினையும் ஆதரவினையும் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், *வேல்ஸ் சமூக உதவி அமைப்புக்கு (Social Care Wales) சமூக பராமரிப்புக்கான தொழில்வாண்மை நடைமுறை கோவை (Code of Professional Practice for Social Care) (கோவை)* ஒன்று உள்ளதோடு, அது பணியாளர்கள் பணிக்குப் பொருத்தமானவர்களாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பணியாளர் குழுக்களைப் பதிவு செய்கின்றது.

நடைமுறைக் கோவை என்பது கவனிப்புப் பணியாளர்கள் உங்களைப் பாதுகாப்பாகவும் நலமாகவும் வைத்திருக்கப் பின்பற்ற வேண்டிய விதிகளின் அல்லது தரநிலைகளின் தொகுதி. அந்தத் தரநிலைகள் யாவை என்று நீங்கள் அறிய இந்தச் சிற்றேடு உதவுகிறது.

## நடைமுறைக் கோவை சொல்லும் விடயங்கள்

உங்களுக்குச் சிறந்த கவனிப்பையும் ஆதரவையும் வழங்க, சமூக கவனிப்புப் பணியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- உங்களுக்கு எது முக்கியமோ அதைச் சொல்லவும் சாதிக்கவும் உதவுதல்
- உங்கள் கண்ணியம், அந்தரங்கம், விருப்பத்தேர்வுகள், கலாசாரம், மொழி, உரிமைகள், நம்பிக்கைகள், கருத்துக்கள், விருப்புகள் ஆகியவற்றை மதித்தல்
- நீங்கள் பாதுகாப்பாக இருக்க ஆதரவளித்தல்
- நேர்மையாக, நம்பிக்கைக்குரியவராக, நம்பகமாக இருத்தல்
- தங்கள் பணியைச் சரியாகச் செய்யத் தகுதியுள்ளவராக இருத்தல்



## நடைமுறைக் கோவையை எங்கே காணலாம்?

இந்த நடைமுறைக் கோவையை, socialcare.wales/code இல் பெறவும் அல்லது codes@socialcare.wales இற்கு மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்

## நடைமுறைக் கோவையை யார் வைத்திருக்க வேண்டும்?

அனைத்து சமூக பராமரிப்புப் பணியாளர்களும் தற்பொழுது பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படாவிட்டாலும்கூட நடைமுறைக் கோவையினைப் பின்பற்றுதல் வேண்டும். எங்களிடம் பதிவு செய்துகொண்டுள்ள சமூக பராமரிப்புப் பணியாளர்கள், தொடர்ந்தும் சமூக பராமரிப்புப் பணியினை முன்னெடுப்பதற்கு நடைமுறைக் கோவையைப் பின்பற்ற வேண்டும். அவர்கள்:

- பெரியோர் கவனிப்பு இல்ல முகமையாளர்கள்
- உள்நாட்டுப் பராமரிப்பு முகாமையாளர்கள் மற்றும் உள்நாட்டு பராமரிப்புப் பணியாளர்கள்
- வதிவிட சிறுவர் பராமரிப்பு முகாமையாளர்கள் மற்றும் வதிவிட சிறுவர் பராமரிப்புப் பணியாளர்கள்
- வதிவிட குடும்ப நிலைய முகாமையாளர்கள்
- சமூகப் பணியாளர்கள் மற்றும் சமூகப் பணி மாணவர்கள்





அவ்வப்பொழுது, ஏனைய குழுக்கள் பதிவில் சேர்க்கப்படும். பின்வரும் பணியாளர்களை எங்களுடன் பதிவுசெய்வதற்கான திட்டங்கள் இடம்பெறுகின்றன:

- பொருந்திக்கொள்ளல் சேவை முகாமையாளர்கள்
- பெரியோர் கவனிப்பு இல்ல முகமையாளர்கள்
- பெரியோர் அமர்த்துகை முகாமையாளர்கள்
- சிறுவர்களுடன் பணியாற்றும் சட்ட ஆலோசனை முகாமையாளர்கள்
- அபிவிருத்திச் சேவை முகாமையாளர்கள்
- வதிவிட குடும்ப நிலையப் பணியாளர்கள்

எங்கள் பதிவேடு பணியாளர்கள் பின்வருமாறு இருப்பதை உறுதி செய்கின்றது:

- பொருத்தமானவர்கள், பணிபுரியும் உடல் தகுதி உள்ளவர்கள்
- நல்ல குணம் உள்ளவர்கள்
- அவர்களுக்குத் தேவையான தகுதிகளைக் கொண்டவர்கள்,
- தொழில்சார் நடைமுறைக் *கோவையைப் பின்பற்ற ஒப்புக்கொள்கின்றார்கள்.*

ஒரு பணியாளர் பதிவு செய்துகொண்டவரா என்பதை இங்கு பார்க்கலாம்:
www.scwonline.wales/en/search-the-register/

## உங்கள் சமூக கவனிப்புப் பணியாளர் நடைமுறைக் கோவையைப் பின்பற்றி வேலை செய்யவில்லை என்றால் நீங்கள் என்ன செய்யலாம்?

1. இங்கு நடைமுறைக் கோவையைப் படித்து அனைத்து தரநிலைகளையும் பரீட்சிக்கலாம்: socialcare.wales/code
2. உங்கள் கவலைகளை உங்கள் கவனிப்புப் பணியாளரின் மேலதிகாரியுடன் பகிருங்கள், அவர் என்ன செய்வார் என்று கேளுங்கள்
3. மேலதிகாரி உங்களது அக்கறைமிக்க விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அடுத்து என்ன செய்வது என்று அறிய நீங்கள் அவரது புகார் செயல்முறையின் நகல் ஒன்றைக் கோரலாம்
4. பணியாளர் எங்களிடம் பதிவு செய்துகொள்ளவில்லை என்றால், மேலதிகாரியுடன் பேசியது உதவவில்லை என்றால், எங்கள் 'தொழிற்பயிற்சி செய்யத் தகுதி' (Fitness to Practise) குழுவிற்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் ftp@socialcare.wales மற்றும் உங்களது விருப்பத்தின் பிரகாரம் அவர்கள் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக உங்களுக்கு பதிலளிப்பார்கள்.

நீங்கள் ஒரு நிறுவனத்தினால் அல்லது அமைப்பினால் வழங்கப்படுகின்ற நியமதர பராமரிப்பு பற்றி கவலைப்படின், நீங்கள் வேல்ஸ் பராமரிப்புப் பரிசோதகரை 0300 7900 126 மூலம் தொடர்புகொள்ளலாம், ciw@gov.wales ஊடாக அல்லது careinspectorate.wales எனும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்து தெரிவிக்கலாம்.

